1969 செப்டம்பர் 11]

திரு. கே. விநயகம் : இந்த அதிகாரிகளின் பெயர் என்ன ? நான்-அபீஷியல்ஸ் யாராவது அந்தக் குழுவில் போடப்பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதிகாரிகள் அடங்கிய குழு என்றால், நான்-அபீஷியல்ஸ் அதில் இல்லை என்பது தெளிவாகத் தெரிய வரும். அரசுச் செயலாளர், நிதித்துறை இந்தக் குழுவின் தலைவர். அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை—உறுப்பினர். அரசுச் செயலாளர், சுகாதாரம்—குடும்ப நலத்துறை—உறுப்பினர். தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை (பொது)—உறுப்பினர். அரசுத் துணைச் செயலாளர் (உள்ளாட்சி பணியாளர்) கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை—உறுப்பினர்— செயலாளர். கிராம வளர்ச்சி இணை இயக்குநர் (கல்வி) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகம்—உறுப்பினர்.

திரு. கே. விநயகம் : இந்தக் குழுவில் மேயர் அவர்களையும், ஸ்டாண்டிங் பினன்ஸ் கமிட்டி சேர்மன் அவர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கத்திற்கு என்ன தடை இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மேயர் அவர்களும், மற்றவர்களும் வந்து அரசினருடைய உதவியை நாடினார்கள். கார்ப்பரேஷன் நிதி நிலைமையில் ஏற்பட்ட சிக்கல்களையும், நடைமுறைச் சங்கடங்களையும் தீர்த்து வைக்க தங்களுக்கு உதவி தேவை என்று கேட்டபொழுது, அந்த அடிப்படையில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதைப்பற்றி ஆராய ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு மேயர் அவர்களையும், செண்டிரல் கமிட்டி சேர்மன், கமிஷனர், ஆகியோர் அனைவரையும் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டுக்கொள்ளும்.

அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்

* 216 வின.—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1—1—1968 முதல் 31—12—1968 முடிய எத்தனை தீர்மானங்கள் போடப் பட்டன ?

(இ) அவற்றில், எத்தனை செய்து முடிக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 403.

(இ) 390.

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்குப் பணிமனைக் கட்டடம்

* 217 வின.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் வடக்கு ஒன்றியத்திற்கான பணிமனைக் கட்டடத்தை (Office Building) இதுவரை கட்டாததற்குரிய காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒரு சில சிறிய பணிகளைத் தவிர மேலூர் வடக்கு ஒன்றியத்திற்கான பனிமனைக் கட்டடம் கட்டும் வேலை அநேகமாக முடிவுறும் தருவாயில் உள்ளது. இப் பணி 1969 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் முடிவடைந்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அங்கு செயல்படுவதற்கு அக் கட்டடம் தகுதியுள்ளதாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இளையாங்குடி—இராசசிங்கமங்கலம் சாலை

*** 218 வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், இளையாங்குடியில் இருந்து இராசசிங்கமங்கலத்துக்கு, கருஞ்சுத்தி, கரும்புக்கூட்டம், தொகவூர், பரத்தவயல், கடுக்கை, வண்டல், செங்குடி வழியாய் பாதை அமைத்துத் தரும்படி பொது மக்களிடமிருந்து நீண்ட காலமாக கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) சாலிகிராமம் சாருகணி சாலையில் மைல் 2/6-லிருந்து வண்டல் வழியாக ஆனந்தூருக்கு சாலை போடும் வேலைக்கு அரசு உத்தரவு அளித்துள்ளது. தொகவூர்—வண்டல் இணைப்புப்பாதை போடுவதற்கும் மேற்படி உத்தரவு பொருந்தும். இளையான்குடி வட்டத்தில் அடங்கிய போக்குவரத்து சாலைகளை அபிவிருத்தி செய்வது நெருக்கடியான நிதி நிலைமையால் அங்கீகரிக்கப்படவில்லை. வண்டலிலிருந்து ராஜசிங்கமங்கலத்திற்கு செங்குடி வழியாக சாலை அமைப்பதும், ராஜசிங்கமங்கலம் கண்மாயில் பக்கச் சுவருடன் குறுக்குப் பாதையும் அமைப்பது ஏராள செலவாகுமாதலால் இவ்வேலை நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பிற்பட்ட திட்டங்களில்தான் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இராசசிங்கமங்கலத்திலிருந்து நமது எம்.எல்.ஏ. மலைக்கண்ணன் பகுதி வண்டலுக்குப் போவதாயிருந்தால் மழை காலத்தில் போட்டில் போனால்தான் முடியும், மற்றபடி அந்த இடங்களுக்குப் போக முடியாத கஷ்டமான நிலை இருக்கிறது. பொது மக்கள் இராசசிங்கமங்கலத்திலிருந்து 15 மைல் சுற்றி வரவேண்டிய நிலை இருக்கிறது. இதை மனதில் கொண்டு அதற்காக அதிக செலவாகும் என்பதை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், மக்களுக்கு அதிக சௌகரியம் செய்து கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்தப் பகுதியில் ரோடு அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தமிழ் நாட்டில் இளையாங்குடி, இராசசிங்கமங்கலம் பகுதியில் மட்டும் இப்படிப் பட்ட சங்கடம் இருக்கிறது என்பதில்லை. பல்வேறு பகுதிகளிலும்